

அரியலூர் மாவட்டத்தில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் ரூ.2.66 கோடி மதிப்பீட்டில் 54 நீர்நிலைகளில் தூர் வாரும் பணிகள் நடைபெறவுள்ளதை முன்னிட்டு இப்பணிகளை தொடங்கி வைக்கும் விதமாக போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் ஊராட்சி ஒன்றியம், ஓட்டக்கோவில் ஊராட்சி வைத்தியலிங்க உடையார் ஏரியில் தூர் வாரும் பணிகளை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, கலந்துகொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின் பாடம் தயாரிப்பு அறையினை (EContent Developing Centre) தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திறந்து வைத்து பார்வையிட்டார்கள். இதில் உயர்கல்வித்துறை செயலர் சி.சமயமூர்த்தி, கல்லூரிக் கல்வி இயக்ககம் ஆணையர் எ.சுந்தரவல்லி, மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மு.சண்முகம், ச.முரசொலி, செல்வி.ஆர்.சுதா, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், டி.கே.ஜி.நீலமேகம், கும்பகோணம் மாநகராட்சி க.சரவணன், துணை மேயர்கள் சுப.தமிழழகன்(கும்பகோணம்), மரு. அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர்), டி.ஆர்.ஓ தெ.தியாகராஜன். ஆட்சியர் திருமதி.ஹிருத்யா எஸ்.விஜயன், கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் முனைவர் து.ரோசி, கல்லூரி முதல்வர் முனைவர் அ.மாதவி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### தஞ்சை வடக்கு மாவட்டத்தில்

# ‘நாடு போற்றும் நான்காண்டு -தொடரட்டும் பல்லாண்டு’ சாதனை விளக்கப்பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை!



தஞ்சை மே.10-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினை ஏற்று தஞ்சை வடக்கு மாவட்டத்தில் ‘நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு’ சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளதாக தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ‘நாடு போற்றும் நான்காம் ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு’ என்ற தலைப்பில் கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்று அறிவிப்புக்கு இணங்க தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கீழ்க்கண்ட இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடைபெறும்.

10.05.2025 சனிக்கிழமை, கும்பகோணம் கிழக்கு ஒன்றியம், திருப்பனந்தாள் கிழக்கு ஒன்றியம், அம்மாபேட்டை வடக்கு ஒன்றியம், திருவிடைமருதூர் கிழக்கு ஒன்றியம், 11.05.2025 ஞாயிறு குடந்தை மாநகர பகுதி - 1, கும்பகோணம் மேற்கு ஒன்றியம், திருப்பனந்தாள் மத்திய ஒன்றியம், பாபநாசம் வடக்கு ஒன்றியம், அம்மாபேட்டை தெற்கு ஒன்றியம், 12.05.2025 திங்கள் குடந்தை மாநகர பகுதி - 2, கும்பகோணம் மத்திய ஒன்றியம், திருப்பனந்தாள் மேற்கு ஒன்றியம், 13.05.2025 செவ்வாய் திருவிடைமருதூர் மேற்கு ஒன்றிய பகுதிகளில் நடைபெற உள்ளது.

மேற்கண்ட கூட்ட ங்களில் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் முன்னாள், இந்நாள் அமைப்பு பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், தொண்டர்கள் தவறாது கழந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

குறிப்பு : மாநகர, ஒன்றிய, பகுதி கழக செயலாளர்கள் மேற்கண்ட தேதியில் இந்த கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### “நாடு போற்றும் நான்காண்டு – தொடரட்டும் இது பல்லாண்டு”

# பெரம்பலூர் மாவட்டத்தில் தி.மு.க.அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!



பெரம்பலூர், மே 10-

பெரம்பலூர் மாவட்டத்தில், பெரம்பலூர் ,குன்னம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளில்,

“நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு “தி.மு.க.அரசின் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள் நடைபெறுகிறது.

இது குறித்து பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.5 விழுக்காடு என்றால், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.69 விழுக்காடு.

தேசிய சராசரியான 2.06 இலட்சம் என்பதை விட தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 3.58 இலட்சம் என 1.74 மடங்கு அதிகரிப்பு.

தமிழ்நாட்டின் உயர் கல்வி சேர்க்கை விகிதம் 47 விழுக்காடு.

நிலையான வளர்ச்சியில் இந்தியாவில் இரண்டாவது இடம்.

சமூக முன்னேற்ற குறியீட்டில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடம்.

வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்கள் வெறும் 1.43 விழுக்காடாக குறைவு. மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் மூலம் 2.25 கோடி மக்கள் பயன்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அரசு மருத்துவமனையில் அதிக படுக்கைகள்.

இந்தியாவிலேயே அதிக தொழிற்சாலைகள் கொண்ட மாநிலம். 5.35 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு களைப்பெற்றதில் நாட்டிலேயே இரண்டாவது இடம்.

ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிப்பதில் நாட்டிலேயே மூன்றாவது இடம், சூரிய சக்தியில் நான்காவது இடம்.

ஸ்டார்ட் அப் தர வரிசைப்பட்டியலில் அ.தி.மு.க.ஆட்சியில் கடைசி இடத்தில் இருந்த தமிழ்நாடு 2022இல் முதலிடம்.

ஏற்றுமதித்தயார் நிலை குறியீட்டில் முதலிடம்.

மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் முதன்மை மாநிலம்.

தோல் பொருட்கள் மற்றும் ஜவுளி ஏற்றுமதியில் முதன்மை மாநிலம்.

நாட்டிலேயே காவல் துறையில் அதிக பெண் அதிகாரிகள் பணிபுரியும் மாநிலம். அதுமட்டுமல்ல சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருப்பதில் நாட்டிலேயே முதல் இடத்தில் உள்ள மாநிலம்.

தமிழ்நாடு என்று திராவிட மாடல் அரசின் மணி மகுடத்தை அலங்கரிக்கும் அடுக்கடுக்கான சாதனைகளால் தமிழ்நாடு இன்றைக்கு முன்னிலையில் இருக்கிறது.

தி.மு.க.மாவட்ட கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதின் அடிப்படையில் நான்காண்டு சாதனைகளை விளக்கி தமிழகம் முழுவதும் 1224 இடங்களில் “நாடு போற்றும் நாண்காண்டு தொடரட்டும் பல்லாண்டு” என்ற தலைப்பில் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள் நடைபெறுகிறது.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி., அறிவுறுத்தலின்படி, போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசணைக்கினங்க,

பெரம்பலூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெறுகிறது.

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி!

09.05.25-வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம் ! காரியனூர் புலவர் அரங்க. நாராயணசாமி. (மு.ராமமூர்த்தி).

10.05.25-வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம் ! வெங்கனூர் அ.பாஸ்கரன்.

11.05.25 -ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம்!

இலந்தங்குழி திராவிடர் கழக பிரச்சாரச் செயலாளர் அ.அருள்மொழி.

ஆலத்தூர் மேற்கு ஒன்றியம்! கண்ணாப்பாடி வி. சபரிஆனந்த்.(ப.வெங்கடேஷ்).

12.05.25-பெரம்பலூர் நகரம்,அ.பாஸ்கரன். குன்னம் சட்டமன்ற தொகுதி!

10.05.25-வேப்பூர் தெற்கு ஒன்றியம்!வேப்பூர துரை.பாண்டியன்.(ந. காருண்யா).

11.05.25-வேப்பூர் வடக்கு ஒன்றியம்! சிறுகுடல், கீழப்புலியூர் புலவர். அரங்க.நாராயணசாமி.

12.05.25 -ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம்! -ஆதனூர் துரை.பாண்டியன்.

இந்த கூட்டங்களில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். ஒன்றிய,நகர கழக செயலாளர்கள் கூட்டத்தை சிறப்பாக நடத்திட கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தஞ்சை வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் கழகத் தலைவர் – தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரையாற்றினார். அருகில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மு.சண்முகம் எம்.பி, முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கா.சொ.க.கண்ணன் எம்.எல்.ஏ, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, நசீர் முகமது, மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் மு.உத்திராபதி, தொழிலாளர் அணி, மாவட்ட தொ.மு.ச கவுன்சில் தலைவர் மாடாகுடி வை.செல்வராஜ், கவுன்சில் செயலாளர் கு.சேவியர், துணை அமைப்பாளர்கள் எஸ்.பாரி யு.நீலநாராயணன், என்.ராமதாஸ், எஸ்.சக்திவேல், துரை.சதீஸ்குமார், கோ.ரகுபதி, இரா.சேரலாதன், ஜெ.குமரேசன், எஸ்.செந்தில் ஆறுமுகம், என்.சந்திரமோகன், எஸ்.மணிமாறன், பி.அருண் உள்ளிட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், முன்னாள், இந்நாள் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் 3 ஆம் கட்ட சிறப்பு முகாம்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

நாமக்கல் மே 10-

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் சட்டமன்றத் தொகுதி, மோகனூர், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியங்கள், நாமக்கல் சட்டமன்றத் தொகுதி, வகுரம்பட்டி ஊராட்சி, திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி, புதுபுளியம்பட்டி உள்ளிட்ட ஊராட்சிகளில் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது.

நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி, நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம்,மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்துகொண்டு , பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று 213 பயனாளிகளுக்கு ரூ.69 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசும்போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திடும் வகையிலும், அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்திடும் வகையிலும், உரிய காலத்தில் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்.

ஆட்சிப் பொறுப்பேற்ற 4 ஆண்டு காலத்தில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி மக்கள் நலன் காத்து வருகின்றார். மகளிர் உரிமைத் தொகை திட்டம், மகளிருக்கு இலவச விடியல் பயணம், விவசாய கடன் தள்ளுபடி, 5 பவுன் வரை நகை கடன் தள்ளுபடி, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் தள்ளுபடி, மகளிர் சுய தொழில் தொடங்கிட தொழில் கடனுதவி, பெண்கள் உயர் கல்வி பயில்வதை ஊக்குவித்திட புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டம், ஏழை, எளிய குழந்தைகளின் பசியினை போக்கிட பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், பொதுமக்களின் நலன் காக்க மக்களைத் தேடி மருத்துவம், கொரோனா காலத்தில் மாணவர்களின் கல்வியைப் பாதுகாக்க இல்லம் தேடிக் கல்வி, கலைஞர் கனவு இல்லம் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். இத்திட்டங்கள் மூலம் ஒவ்வொரும் குடும்பத்தாரும் மாதம் ரூ.2,000/ முதல் ரூ.2,500/ வரை சேமிக்க கூடிய சிறப்பு வாய்ந்த திட்டங்கள் ஆகும்.

மேலும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுமக்கள் அரசுத் துறைகளை தேடி வந்து மனுக்களை அளித்த நிலையை மாற்றி அரசுத்துறை அலுவலர்கள் பொதுமக்களை நேரடியாக சந்தித்து அவர்களது கிராமங்களுக்கே சென்று மனுக்களை பெற்று தீர்வு வழங்கிடவும், ஏழை, எளிய பழங்குடியின மக்களின் கோரிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து கூடுதல் கவனம் செலுத்திட வேண்டுமென உத்தரவிட்டதன் அடிப்படையில், “மக்களுடன் முதல்வர்” முகாம் 3ம் கட்டமாக நடத்த உத்தரவிடப்பட்டு, நாமக்கல் மாவட்டத்தில் கடந்த பிப்ரவரி மாதம் 21 ஆம் தேதி முதல் தற்போது வரை 55 முகாம்கள் நடத்தப்பட்டு பொதுமக்களிடமிருந்து சுமார் 21,361 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் கீழ் பொதுமக்கள் அதிகளவில் அணுகும் வருவாய்துறை, ஊரக வளர்ச்சித்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, வேளாண்மைத் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை உள்ளிட்ட 15 அரசு துறைகள் சார்ந்த 44 வகையான கோரிக்கைகளைப் பெற்று தீர்வு காணப்பட உள்ளது. இம்முகாம்களில் மின் இணைப்பு பெயர் மாற்றம், வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், பட்டா உட்பிரிவு மாறுதல், கடனுதவி, பல்வேறு சான்றிதழ்கள், உதவித்தொகை உள்ளிட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீதும் தீர்வு வழங்கப்பட உள்ளது.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 2021 முதல் 2025 வரை கலைஞர் கனவு இல்லம், ஊரக வீடுகள் பழுது பராமரிப்பு திட்டம், பிரதான் மந்திரி கிராம குடியிருப்பு திட்டம், சாலை பணிகள், குடிநீர் திட்ட பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், சிறுபாலம் அமைத்தல், சுகாதார பணிகள், தடுப்பணை, விளையாட்டு மைதானம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், வகுரம்பட்டி ஊராட்சியில் ரூ.2.69 கோடி மதிப்பீட்டில் 65 திட்டப்பணிகள்,

மோகனூர் ஊராட்சி ஒன்றியம், கொமராபாளையம் ஊராட்சியில் ரூ.4.14 கோடி மதிப்பீட்டில் 199 திட்டப்பணிகள், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், சேளூர் ஊராட்சியில் ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் 179 திட்டப்பணிகள், வடகரையாத்தூர் ஊராட்சியில் ரூ.13.08 கோடி மதிப்பீட்டில் 314 திட்டப்பணிகள், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம், புதுப்பு ளியம்பட்டி ஊராட்சியில் ரூ.1.76 கோடி மதிப்பீட்டில் 41 திட்டப்பணிகள் நிறை வேற்றப்பட்டுள்ளன. அரசின் அனைத்து திட்டங்களையும் பொதுமக்கள் பயன்படுத்தி கொண்டு தங்கள் வாழ்க்கை தரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து அரசுத்துறைகள் சார்பில் நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், வகுரம்பட்டியில் 54 பயனாளிகளுக்கு ரூ.41.26 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், கொமாரபாளையம் ஊராட்சி, கீழ்பாலபட்டியில் 67 பயனாளிகளுக்கு ரூ.6.62 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், சேளூர் ஊராட்சியில் 8 பயனாளிகளுக்கு ரூ.3.86 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், வடகரையாத்தூர் ஊராட்சியில் 21 பயனாளிகளுக்கு ரூ.5.35 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம், புதுபுளியம்பட்டி ஊராட்சியில் 32 பயனாளிகளுக்கு ரூ.4.31 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 182 பயனாளிகளுக்கு ரூ.61.40 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், தெரு நாய்களால் தாக்கப்பட்டு உயிரிழந்த கால்நடைகளின் உரிமையாளர்கள் 31 நபர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.7.57 இலட்சம் நிவாரணத் தொகை வழங்கினார்.

இம்முகாம்களில் துணை மேயர் செ.பூபதி, ஒன்றிய கழக செயலாளர்கள் வி.கே.பழனிவேல், பெ.நவலடி, கே.கே.சண்முகம், எம்.தங்கவேல், கே.பி.இராமசுவாமி, மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், தனித்துணை ஆட்சியர் ச.பிரபாகரன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கே.ஏ. சிவக்குமார், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் க.கலைச்செல்வி, முகாம் பொறுப்பு அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செயற்குழு கூட்டம் வாழப்பாடியில் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் சந்திரமோகன், சோமசுந்தரம், மனோகரன், முத்துலிங்கம், மலர் விழி ராஜா , சங்கர், கோபால், தமிழ்செல்வன், ராஜா, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் வெண்ணிலா சேகர், மாணிக்கம், உமாசங்கர், விஜயகுமார் ரத்தினவேல், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், ராஜேந்திரன், மூர்த்தி, சிவராமன், தங்க மருதமுத்து, டாக்டர் செழியன், மணி, பாலமுருகன், சித்தார்த்தன், அழகுவேல் , நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியம், வேல்முருகன், மற்றும் பேரூர் செயலாளர்கள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.